**கைதிகள் நலன்புரி நிதியம் - 2023**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கைதிகள் நலன்புரி நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள், மொழிப்பாக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இவ்வறிக்கையின் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் எழும் தாக்கத்தினை தவிர, நிதிக்கூற்றுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு கொள்கைகளிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையனதும் நியாயமானதுமான நிலைமையினை பிரதிபழிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்.எல்.ஏயூ.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்து இயங்கும் இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவம் நிதியத்தை கலைக்க நாடினால் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாத போது செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் அன்றி தொடர்ந்து இயங்கும் அடிப்படையில் கணக்கு வைக்கும் மற்றும் நிதியத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டுடன் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்திக் கொள்வதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மையான தன்மை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால் அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றி அமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களில உள்ள

வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்

## 1.5. நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் செயற்படுத்துதல், தொடர்புடைய அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிக்க தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களை பதிதல் மற்றும் சொத்துக்கள் மற்றும் கணக்கீட்டை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களிற்கு பிரவேசித்தல், குறிப்பிடப்பட்ட சொத்துக்களிற்கான கணக்கீட்டை பேணி சொத்துக்களுடன் நியாயமான காலத்தினுள் இணக்கம் செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படின் அவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் போன்றவைகளிற்காக நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்ளல் போதிய ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டுத் தொகுதியொன்றை நிறுவனத்தினால் பேணிச் செல்வது தேவையாகும்.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கைதிகள் நலன்புரி நிதியத்தின் கணக்கீட்டுக் கொள்கை பிரகாரம் நிதியத்திற்கு அன்பளிப்பாக கிடைக்கும் நடைமுறையல்லா சொத்துக்கள் திணைக்கள நிதிக்கூற்றுக்களில் மூலம் காண்பித்துள்ள போதும், மீளாய்வாண்டில் அன்பளிப்பாக கிடைத்த ரூபா 1,731,476 தொகை மற்றும் பெறுமதி தெரியாத 09 விடயங்களிற்குரிய நடைமுறையல்லா சொத்துக்கள் சிறைச்சாலை திணைக்கள நிதிக்கூற்றுக்களில் அல்லது கைதிகள் நலன்புரி நிதியத்தில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் சொத்துககள் மீதான கொள்கையாவது நிறுவனத்திற்கு கிடைக்கும் அனைத்து அன்பளிப்புக்களும் சிறைச்சாலையின் பிரதான களஞ்சியத்திலுள்ள பேரேட்டில் குறித்து நுகர்வுப் பொருட்கள் அந்த பேரேட்டிலிருந்து தேவைக்கேட்ப சிறைச்சாலைக்கு விநியோகிக்கப்படுவதுடன், அன்பளிப்பாக கிடைக்கும் நிலையான சொத்துக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கினூடாக கணக்கீடு செய்யப்படுவதென. | நிதியத்திற்கு அன்பளிப்பாக கிடைக்கும் நடைமுறையல்லா சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கைதிகள் நலன்புரிக்காக சிறைச்சாலை நிறுவனத்திற்கு கிடைக்கும் நுகர்வுப் பொருட்களை கணக்கீடு செய்யவதற்கு முறையான கொள்கையொன்றை இனங்கண்டு அல்லது வெளிப்படுத்தியேனும் இல்லாத காரணத்தால் மீளாய்வாண்டில் 94 விடயங்களிற்கு உரியதாக பெறுமதி ரூபா 1,996,297 தொகை மற்றும் பெறுமதி தெரியாத 136 விடயங்களின் நுகர்வுப் பொருட்கள் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தியிருக்கவில்லை. | சிறைச்சாலை நிறுவனங்களிற்கு கிடைக்கும் நுகர்வுப் பொருட்களை கணக்கீடு செய்யவதற்கு கணக்கீட்டுக் கொள்கையொன்று அவசியமற்றதாகும். | நுகர்வுப் பொருட்களை கணக்கீடு செய்யவதற்கு முறையான கொள்கையொன்றை அறிமுகம் செய்து கணக்கீட்டு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை 877(2)(அ) பந்தி | நிதியத்திற்காக வேறான வங்கிக் கணக்கொன்றை பேணிச் செல்லாததுடன், நலன்புரி நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் திணைக்கள உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கினூடாக மேற்கொள்ளப்பட்டு இருந்தது | நிதிப் பிரமாணம் 877 மற்றும் பொது நிதி சுற்றறிக்கை 01/2020 பிரகாரம் நிதியமொன்றிற்காக வேறான வங்கிக் கணக்கொன்றை பேணிக் கொள்ள வேண்டியதால் கைதிகள் நிலன்புரி நிதியத்திற்கு வேறான வங்கிக் கணக்கொன்றை திறக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணம் 877(2)(அ) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 403,785 ஆன மிகையானதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 758,638 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 354,853 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டில் நிதியத்திற்கு கிடைத்திருந்த வருமானம் குறைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. முகாமைத்தவ வினைத்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறைச்சாலை கைதிகளிடம் காணப்படும் கலை திறைமைகளை விருத்தி செய்து சிறைசாலை அலுவலர்கள் மற்றும் அவர்களிற்கிடையே நட்பை ஏற்படுத்தும் நோக்கில் சிறைசாலையின் மனித மற்றும் பௌதீக வளங்களை பயன்படுத்தி லலித சரசர கருத்திட்டத்தை செயற்படுத்தியிருந்ததுடன், இந்த கருத்திட்டத்திற்குரியதாக ரூபா 8.5 மில்லியன் வருமானம் திரட்டப்பட்டிருந்ததுடன், ரூபா 1.1 மில்லியனான உபசரிப்பு செலவு உட்பட ரூபா 4.7 மில்லியன் செலவிட்டு எஞ்சிய தொகையாக ரூபா 3.75 மில்லியன் வெலிகட கைதிகள் நலன்புரி உப சங்கத்தின் வங்கிக் கணக்கில் பேணப்பட்டுவருகின்றது. கைதிகள் நலன்புரி நிதியத்தினால் இக் கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டது எனில் இந்த மீதித் தொகையை முறையாக கைதிகளின் நலன்புரிக்காக பயன்படுத்துவதற்கு செயற்படுத்துவதை போன்றே அரச கணக்காய்விற்கும் உட்படுவதுடன், அதனை மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் மேற்களொள்ள அரச வளங்களை பயன்படுத்தி மேற்கொண்ட இந்த கருத்திட்டத்திற்கு இயலுமை காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | கைதிகள் நலன்புரி சங்கம் அமைக்கப்பட்டு தற்போது பல ஆண்டுகள் கடந்துள்ள போதும் இந்த கருத்திட்டத்தை கைதிகள் நலன்புரி நிதியத்தின் ஊடாக மேற்கொள்ள இயலுமை இல்லாததுடன், அங்கு காணப்படும் மீதியை சிறைசாலை நிறுவனங்கள் அனைத்தினதும் மறுசீரமைப்பு நிகழ்சித் திட்டத்திற்கு போதியதாக இல்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. | கைதிகள் நலன்புரி நிதியத்தின் மூலம் இவ்வாறான கருத்திட்டத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கைதிகள் நலன்புரி நிதியத்தின் மூலம் கைதிகள் நலன்புரி நிகழ்சித் திட்டங்களை சரியாக எதிர்வு கூர்ந்து நடைமுறை சாத்தியமாக செலவின மதிப்பீடொன்றை தயாரிக்காததால் ஆரம்ப மதிப்பீட்டின் எதிர்பார்த்த செயலாற்றுகைக்கு ஒப்பாக உண்மையாக செயற்படுத்திய நிகழ்சித் திட்ட எண்ணிக்கை 3 சதவீதமாகும். | ஆரம்பத்தில் தயாரித்த மதிப்பீட்டை திருத்தியதன் மீது எதிர்பார்த்த நிகழ்சித் திட்டங்களையும் அதன் பிரகாரம் குறைக்க நேரிட்டது. மேலும் 2023 ஆண்டிற்காக கைதிகள் நலன்புரி நிதியத்தால் செலவு செய்ய அங்கீகாரம் | நிதிய மதிப்பீட்டை நடைமுறை சாத்தியமாக தயாரித்து சரியான கால சட்டகத்தினுள் நிகழ்சித் திட்டங்களை செயற்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வழங்கப்பட்டது ஜுலை மாதம் ஆகையால் கைதிகள் நலன்புரி நிதியத்தால் நிகழ்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது 2023 ஆகஸ்ட் மாதம் முதலாகும். இங்கு குறிப்பிடப்படுவது ஆகஸ்ட் மாதத்திலிருந்து செயற்படுத்திய நிகழ்சித் திட்ட எண்ணிக்கை ஆகும். கைதிகள் நலன்புரி நிதியத்திலிருந்து பணம் செலவு செய்யும் அங்கீகாரத்தை வருட ஆரம்பத்தில் பெற்று அதன் நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1. பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கைதிகள் நலன்புரி நிதியத்தின் 2023 ஆண்டிற்கான ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம் எதிர்பார்த்த வருமானம் ரூபா 858,500 தொகை மற்றும் எதிர்பார்த்த செலவு ரூபா 1,500,000 தொகையும் ஆகும். கைதிகள் நலன்புரிக்காக போதிய தொகையை செலவிட இயலுமாக இருக்கும் போது நிதிய ஆரம்ப மதிப்பீட்டின் செலவு 53.3 சதவீதம் வரை அதாவது ரூபா 800,000 வரை குறைக்கப்பட்டு இருந்ததுடன், 2023 ஆண்டினுள் உள்ளவாறான வருமானம் ரூபா 1,172,126 தொகையும், உள்ளவாறான செலவு ரூபா 768,341 ஆனது. மேலும் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 5,299,068 தொகை மற்றும் மீளாய்வாண்டு இறுதியில் கைதிகள் நலன்புரி நிதியத்தில் ரூபா 5,696,914 ஆன மீதி நிலவியதால் கைதிகள் நலன்புரிக்காக போதிய தொகை செலவிடப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | ஏதிர்வரும் ஆண்டிற்கான மதிப்பீட்டை தயாரிக்கும் போது நிதிய மீதியை பரீட்சித்துப் பார்த்து அதிக தொகையை நிகழ்சித் திட்டத்திற்காக வழங்க நடவடிக்கை எடுப்பதென அறவிக்கப்பட்டுள்ளது. | கைதிகளின் நலன்புரியை அடிப்படையாகக் கொண்டு நிதிய மதிப்பீட்டை நடைமுறை சாத்தியமாக தயாரித்து அதன் பிரகாரம் செலவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |